பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 29உ (13—7—67) வியாழன் ★ வெளியூர்: ஆனி 30உ (14—7—67) வெள்ளி [இதழ்: 25

நிலைமை சீர்கேடடையவில்லை!

கே. விநாயகம்:—"நெல் பயிரிடும் நிலங்களில் நெல்லுக்குப் பதிலாகக் கரும்பு—வாழை—வேர்க்கடலை முதலிய வணிகப் பயிர்களைப் பயிரிட முனைவதற்குக் காரணம், நெல் விலை மற்றப் பயிர்களைவிடக் குறைவாக இருப்பதால்தான் என்பது அரசுக்குத் தெரியுமா? இந்நிலையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?"

முதலமைச்சர் அண்ணா:—"அரசு தலையிட்டுத் தடுக்கக்கூடிய அளவுக்கு நிலைமை சீர்கேடடைந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—(சட்டமன்றத்தில்: 12-7-67)

15 மொழிகளில் பரீட்சை

புதுடில்லி, ஜூலை 12—

மத்திய அரசு அலுவலர் தேர்வுக்குழுத் (யூனியன்பப்ளிக் சர்வீஸ் கமிஷன்) தேர்வுகளை 15 மொழிகளிலும் நடத்துவது இந்த ஆண்டு இறுதியில் நடைமுறைக்கு வரலாம்.

தூத்துக்குடி--சேலம் 'எழுச்சி நாள்'

கழக அமைப்புகளுக்கு பொதுச்செயலாளர் வேண்டுகோள்

அன்புடையீர்!

வணக்கம். சேலம் இரும்பாலை—தூத்துக்குடி துறைமுகம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவதில் மத்திய அரசு காட்டும் அலட்சியப் போக்கைக் கண்டிக்கவும், தமிழகத்தின் பொருளாதாரச் செழிப்புக்கும் வளத்துக்கும் இந்த இரு திட்டங்களும் இன்றியமையாதவை ஆதலால், அவைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற தமிழக மக்களின் ஒருமித்த எழுச்சிக் குரலை மத்திய அரசுக்கு எடுத்துககாட்டி, 'அவை எப்படியும் நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும்' என்பதை வலியுறுத்தவும், 1967 ஜூலைத் திங்கள் 23-ம் நாளை சேலம்—தூத்துக்குத் திட்டங்களின் எழுச்சி நாளாகக் கொண்டு நாடெங்குமுள்ள தி. மு. கழக அமைப்புகள் அனைத்தும் அன்று பொதுக்கூட்டங்கள் வாயிலாக அத்திட்டங்கள் சம்பந்தமான தற்போதைய நிலையை விளக்கியும், அவை சம்பந்தமாக எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் அவசிய அவசரத்தை மத்திய அரசுக்கு உணர்த்தியும் நாம் செயல்பட வேண்டும் என்று தலைமைக் கழகம் ஏற்கனவே அறிவித்துள்ளதைத் தோழர்கள் அறிவர்.

அதற்கேற்ப, 23—7—67 அன்று மாலை கழக அமைப்புகள் அனைத்தும் தத்தம் ஊர்தோறும் சொற்பொழிவாளர்களைக் கொண்டு பொதுக்கூட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

தி. மு. கழகச் சார்பில் நடத்தப்பெறும் எழுச்சி நாள் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கழகத்தின் சட்டமன்ற—பாராளுமன்ற கட்சிகள் அனைத்தும் கழகப் பொதுச் செயலாளர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கழகப் பொதுச்செயலாளரால் அழைப்பு அனுப்பப்பட்டு, எழுச்சி நாள் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டிய கட்சிகள் (1) முஸ்லிம் லீக்; (2) சுதந்திரக் கட்சி; (3) இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி; (4) வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி; (5) தமிழரசுக் கழகம்; (6) பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி; (7) சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி—ஆகியவை ஆகும்.

அந்தந்த நகரத்தில் அல்லது மாவட்டத்தில் உள்ள மேற்படி கட்சிகளின் அமைப்புகளை அணுகி, அந்தந்த கட்சிகளின் சார்பில் 23—7—67-ஆம் நாள் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டு, அந்தந்த கட்சிகளின் சார்பில் கலந்துகொள்வதாக ஒப்புதலளிக்கும் தோழரின் பெயரையும் நன்கு விளம்பரப்படுத்திக் கூட்டத்தைச் சிறப்பிக்குமாறு கழக அமைப்புகளின் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகம் அலட்சியமாக நடத்தப்பட்டிருப்பதையும், குறிப்பாக சேலம்—தூத்துக்குடித் திட்டங்களில் மத்திய அரசு நடந்துகொள்ளும் ஏமாற்றந்தரும் போக்கினை விளக்கியும், இரு திட்டங்களும் நிறைவேற மத்திய அரசு உடன் செயல்முறை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்தியும் மட்டுமே 23—7—67-ம் நாள் கூட்டத்தில் பேசப்படுதல் வேண்டும் என்று தலைமைக் கழகம் விரும்புகிறது.

கூட்டத்தின் இறுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானத்தின் வாசகங்கள் கழக ஏடுகளில் வெளியிடப்படும். தீர்மானத்தை கூட்டத் தலைவர் முன்மொழிந்து கூடியுள்ள மக்கள் அனைவரும் ஆமோதிக்கும் வகையில் நிறைவேற்றி அதன் படிகளை (பிரதிகளை) (1) தலைமையமைச்சர் இந்திரா காந்தி; (2) மத்திய அரசு திட்ட அமைச்சர்; (3) தமிழக-முதலமைச்சர்; (4) அந்தந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்—ஆகியவர்களுக்கும், கழகத் தலைமை நிலையத்திற்கும் கூட்டம் முடிந்த மறுநாள் காலையே அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் தங்கள் மாவட்ட—வட்டங்களைச் சார்ந்த கழக அமைப்புகள் அனைத்தும், 23-7-67 எழுச்சி நாளைச் சிறப்புற கொண்டாடி பொதுக்கூட்டம் நடத்தும் வகையில் மாவட்ட—வட்டக் கழக அமைப்புக்களின் நிர்வாகிகளும், தோழர்களும் அறிவித்து ஆவன செய்யுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை
பொதுச்செயலாளர் தி.மு.க.

அறிவகம்' சென்னை-13
30—6—1967

மாணவர் 'ராக்கிங்' முறைக்குத் தடை

யார் ஈடுபட்டாலும் கடும் தண்டனை

எல்லாக் கல்லூரித் தலைவர்களுக்கும் அரசு சுற்றறிக்கை

சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 13—

கல்லூரிகளில் புதிதாகச் சேரும் மாணவர்களைப் பழைய மாணவர்கள் ஏளனம் செய்து துன்புறுத்தும் 'ராக்கிங்' முறை கூடாது என்று எல்லாக் கல்லூரிகட்கும் சுற்றறிக்கை விடுத்திருப்பதாகவும், இந்த முறையில் ஈடுபடும் மாணவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி எல்லா கல்லூரிகட்கும் ஆணை பிறப்பிக்க ஆவன செய்யப்பட்டுள்ளதாகவும், கல்வி—தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

"கோவையில் உள்ள ஓர் பொறியியல் கல்லூரியில் கோவிந்தராசன் என்னும் மாணவன், ஏனைய மாணவர்களின் துன்புறுத்தல் விளையாட்டுக்கு ஆளாகி, அதன் விளைவாகத் தற்கொலை செய்துகொண்டதாகச் செய்தி வெளியாகியிருப்பது குறித்து விவாதிக்க வேண்டும்"

என்று, டாக்டர் ஹண்டே (சுதந்தரா) இன்று சட்டமன்றத்தில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதேபோன்று மற்றொரு தீர்மானத்தை பி. சோ. கட்சி உறுப்பினர் திரு. சுரேந்திரனும் கொண்டு வந்தார்.

இத்தீர்மானங்களுக்குப் பதிலளிக்கும் வகையில கல்வி-தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

"இந்த நிகழ்ச்சி பற்றிக் கேள்விப்பட்டதும் நான், கல்வித்துறை இயக்குநரை அழைத்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

"இந்த நிகழ்ச்சி எந்தக் கல்லூரியில் நடந்தது—எப்படி எந்தக் காரணங்களால் நடந்தது-என்ற முழு விபரம் இன்னும் கிடைக்கவில்லை; தகவல் சேகரிக்கப்படுகிறது.

"மேலும், எல்லாக் கல்லூரித் தலைவர்களுக்கும் ஏற்கனவே, இந்த 'ராக்கிங்' முறையை அனுமதிக்கக்கூடாது என்று சுற்றறிக்கை விடுக்கப்பட்டிருப்பதுடன், சென்னையில் உள்ள கல்லூரிகளிலும் அப்படி நடக்காமல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

"கல்வித்துறை இயக்குநர் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டுள்ளார். மீண்டும், இந்த 'ராக்கிங்' முறை கூடாது என்று எல்லாக் கல்லூரித் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படுவதுடன், இதில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் கடுமையான தண்டனை விதிக்கத்தக்க நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"கோவை சம்பவம் பற்றி முழு விவரம் கிடைத்ததும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

(5-ம் பத்தி பார்க்க)

'முரசொலி'மீது உரிமைப் பிரச்சினை இல்லை

கொண்டுவந்த உறுப்பினர்மீது உரிமைப் பிரச்சினை--சட்டமன்ற அவைத் தலைவர் தீர்ப்பு

சென்னை, ஜூலை 13—

'முரசொலி' இதழ்மீது காங்கிரசு உறுப்பினர் திரு. மார்ட்டின் சட்டமன்றத்தில் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினை தள்ளுபடி செய்யப்பட்டது.

(3-ம் பத்தி தொடர்ச்சி)

"'மாணவர்களின் செயல்கள் நல்லதோ தீயதோ—எதுவாயினும், அதுபற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை' என்று இதே அவையில் ஏற்கனவே பல தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்கிறது; அதன்படியும், அவையின் விதிப்படியும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தள்ளுபடி செய்கிறேன்" என அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அறிவித்தார்.

"'முரசொலி'யில் வெளியான முதலமைச்சர் அண்ணா அவர்களின் பேச்சின் ஒரு பகுதி, ஏற்கனவே உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ள 'நவசக்தி'யில் வெளியானதே போன்றது—என்று திரு. மார்ட்டின் குறிப்பிட்டிருந்தது சரியல்ல" என, அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தமது தீர்ப்பில் கூறினார்.

'நவசக்தி'யில் வெளியான வாசகங்களுக்கும், 'முரசொலி'யில் வெளியாகியுள்ள வாசகங்களுக்கும் உள்ள சொல், பொருள் வேறுபாடுகளை அவைத் தலைவர் சுட்டிக் காட்டினார்.

'நவசக்தி'யில் வெளியான—உரிமைப் பிரச்சினைக்கு ஆளான அதே வாசகத்தைத்தான், 'முரசொலி' வெளியிட்டிருக்கிறது என்று திரு. மார்டின் குறிப்பிட்டு, 'உரிமைப் பிரச்சினை எழுப்பியது, அவைத் தலைவர் மீது குற்றஞ்சாட்டக்கூடிய வகையில் இருப்பதால் திரு. மார்ட்டின்மீது உரிமைப் பிரச்சினை எழுந்துள்ளதாக அவைத் தலைவர் நேற்றே அறிவித்திருந்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் இது குறித்துக் கருத்தறிவிக்கையில், தமது கட்சி உறுப்பினர் அவைத் தலைவரின் தீர்ப்பை மேற்கோளாகவே சுட்டிக்காட்டியதாகவும், குற்றஞ்சாட்டும் நோக்கத்துடன் அல்ல என்றும் வாதாடினார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் கருத்தறிவிக்கையில், மேற்கோள் காட்டுவதில் தவறில்லை என்றும், ஆனால் அவைத் தலைவர், முன்பு உரிமைப் பிரச்சினையாக ஏற்றுள்ள அதே பகுதியை 'முரசொலி' வெளியிட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டுவது அவைத் தலைவர்மீது குற்றஞ்சாட்டும் வகையிலேயே கருதப்படுவதால், திரு. மார்ட்டின், தமது நோக்கம் குற்றஞ்சாட்டுவதல்ல என்பதையும், நேர்ந்துவிட்டதற்காக வருந்துவதாகவும் தெரிவித்துவிட்டால் இப்பிரச்சினை எளிதில் முடிந்துவிடும் என்றும் கூறினார்.

அதே நேரத்தில், 'நவசக்தி' வாசகத்திற்கும்—'முரசொலி' வாசகத்திற்கும் மிகுந்த பொருள் வேறுபாடு இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

திரு. கருத்திருமன், தமது கட்சி உறுப்பினருக்காகவே தாம் வாதாடுவதாகவும், தம் கருத்தை ஏற்றுக்கொண்டு எந்தவிதத் தீர்ப்பையேனும் அளிக்கட்டும் என்றும் கூறினார்.

அடுத்து அவைத் தலைவர் தமது நிலைமையை விளக்கினார்.

அடுத்து மீண்டும் திரு. கருத்திருமன் தமது கருத்தையே வலியுறுத்திப் பேசிக்கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் அவைத் தலைவர் குறுக்கிட்டபோது, திரு. கருத்திருமன், தமது பேச்சை நிறுத்திக் கொண்டு அமர்ந்தார்; உடன் எழுந்து, வெளிநடப்பதாகக் கூறி வெளியேறினார்; அவரது கட்சி உறுப்பினர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

பின்னர், திரு. மார்ட்டின்மீதான உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு விடுவதாக அவைத் தலைவர் தீர்ப்பளித்தார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 29 (13—7—67) வியாழன்

தீமையில் ஏற்பட்ட நன்மை

சென்ற பத்து நாட்களாக சென்னை நகரத்தில் தொடர்ந்தாற் போல் நிகழ்ந்துவரக்கூடிய—ஏழைமக்களின் குடிசைகளுக்குக் கொள்ளிவைக்கின்ற கொடுமை, சிறுகச்சிறுக மறைந்து வருகிறது. கொள்ளிவைக்கின்ற இந்தக் கொடுமை பற்றிய நிகழ்ச்சிகள் மூட்டி வந்த பீதியும், பரபரப்பும், மெள்ள மெள்ளத் தணிந்துகொண்டு வருகிறது.

தங்கள் குடிசைகளும் தீக்கிரையாகிவிடுமோ என, பொது வாகக் குடிசைவாழ் மக்கள் கொண்டிருந்த அச்சம், மறையத் தொடங்கி இருக்கிறது. அவர்கள் முகங்களில் ஏற்கனவே தெளி வாகத் தெரிந்த கவலைக்குறிகள், இப்பொழுது மாறிவருகின்றன! அவர்கள் மனம் நிம்மதி அடைந்து வருகிறது! கொள்ளிவைப்புக்கு ஆளாகி, தங்கள் குடிசைகளையும், மற்ற உடமைகளையும் பறி கொடுத்த மக்களுக்கு, உடனடியாகத் தங்கும் இடமும் உணவும் கொடுத்து உதவுவதில் அரசும், மாநகராட்சி மன்றமும் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியைப் பாராட்டாதவர்கள் இல்லை.

எதிர்பாராதவகையில் இடையருது கடந்த பத்து நாட்களாக ஏற்பட்டுவந்த இந்தத் தீக்கொடுமை, அரசுக்குப் பெருங் கவலையைக் கொடுத்துள்ளது என்பதை, ஒளிவு மறைவில்லாமல் முதலமைச்சர் அறிவித்திருக்கின்ருர்.

இதைவிட, தீக்கொடுமைக்கு ஆளாகிச் சொத்தையும் சுகத் தையும் இழந்து, சொல்லொணுத் துயரத்துக்கு ஆளாகி அவதிப் பட்டுக்கொண்டிருக்கின்ற ஏழை மக்களின் கண்ணீரைத் துடைப் பதிலும், மீண்டும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதிலும் தமக்கு மிகுதியான கவலையும் அக்கறையும் இருக்கிறது என்ற உண் மையையும், முதலமைச்சர், திட்டவட்டமாகத் தமது அறிக்கை வாயிலாக அறிவித்திருக்கின்ருர்.

வெறும் ஆறுதல் கூறுவது—உதவி செய்வதாக உறுதி கூறு வது என்ற அளவில், நமது முதலமைச்சர் இருந்திடவில்லை. தமது ஆறுதல் மொழிக்கும், உதவி செய்யும் விருப்பத்துக்கும், காலந் தாழ்த்தாது செயலுருவம் கொடுத்தும் விட்டார் முதலமைச்சர்.

இதற்கு முன்பெல்லாம் ஏற்பட்டிருக்கின்ற தீயினுல் வெந்து சாம்பலான குடிசைகளை மீண்டும் புதுப்பிக்கின்ற பணி நடை பெற்றுத்தான் வந்திருக்கிறது. குடிசை இழந்தவர்களுக்கு, இது வரை செய்யப்பட்டு வந்திருக்கின்ற உதவி, மீண்டும் குடிசைகளைப் புதுப்பித்துக் கொள்வதற்குரிய பண உதவியே ஆகும். பண உதவிக்குப் பதிலாக, குடிசைகளைக் கட்டிக் கொள்ளுவதற்கான பொருட்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இம்முறையின் மூலம், புதுப்பிக்கப்பட்ட குடிசைகளுக்கு, தீயினுல் ஏற்படக்கூடிய அபாயம் எப்பொழுதும் உண்டு. தீக் கிரையாவதும், அரசாங்க உதவியுடன் மறுபடியும் குடிசைகள் புதுப்பிக்கப்படுவதுமே இதுவரையில் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது.

நடைமுறையில் இருந்துவருகின்ற இம்முறையிலுள்ள குறை பாட்டினை எடுத்துக்காட்டிப் பேசப்பட்ட பேச்சுக்களும், எழுதப் பட்ட எழுத்துக்களும் ஏராளம், ஏராளம்! இம்முறையை மாற்றி அமைத்திட வேண்டும் என வற்புறுத்தி வந்திருப்பதுடன், 'தீயினுல் தீண்டமுடியாத குடியிருப்புக்களைக் கட்டியாக வேண்டும்' எனக் கூறப்பட்ட கருத்துரைகளும் ஏராளம், ஏராளம்!

ஆனுல், இந்தக் கருத்துரையின் உள்ளடக்கத்தை, ஏற்க னவே இருந்த காங்கிரசு அரசு உணர்ந்திருந்தாலும், பழைய முறையைக் கைவிட்டுவிட்டுப் புதிய முறையை—அதாவது, தீயி னுல் தீண்ட முடியாத குடியிருப்புகளைக் கட்டுவதை, ஏற்கனவே இருந்த அரசு சுவைபடப் பேசிவந்திருந்தபோதிலும்—ஏட்டளவில் எழுதிக்காட்டி இருந்தபோதிலும், அவை அனைத்தும் வெறும் சொல்லலங்காரமாகவே அமைந்துவிட்டிருக்கின்றன.

அந்தச் சுவைமிக்க பேச்சும், பகட்டான திட்டங்களும் குடிசை வாழ் மக்களின் ஆசையைத் தூண்டத்தான் பயன்பட்டிருக்கின் றனவே அல்லாது, காதொடிந்த ஊசி அளவுக்கும் பயன் அளித் திடவில்லை. ஏழை மக்கள் பெற்றுவந்திருப்பதெல்லாம், ஏமாற்றம், ஏமாற்றம்தான்!

ஆனுல் இன்ருே, அந்த நிலை மாறியேவிட்டது. புரட்சிகர மாக மாற்றி அமைத்துவிட்டது—அறிஞர் அண்ணு அவர்களை முதலமைச்சராகக்கொண்டு, தரம்படச் செயல்பட்டுவரக்கூடிய தமிழக அரசு!

அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தினுல், குடிசை இழந்த மக்க ளிடம் குறைந்த அளவு பணத்தையோ அல்லது குடிசைகளைக் கட்டுவதற்கான பொருட்களையோ கொடுத்து, 'குடிசைகளைப் பழையபடியே அமைத்துக்கொள்ளுங்கள்' என்ற பழைய முறைக்கு—காங்கிரசு ஆட்சியால் கையாளப்பட்டுவந்த பயனற்ற முறைக்கு—இன்றையத் தமிழக அரசு இறுதியாகச் சீட்டுக் கிழித்துவிட்டது!

புத்தம் புதிய முறையை—புரட்சிகரமான முறையை—பல ஆண்டுக்காலமாகச் சொல்லலங்காரமாகச் சுவைபடப் பேசப் பட்டுவந்திருக்கின்ற முறையை—தமிழக அரசு, தீவிரமாகச் செயல்படுத்தத் துவங்கிவிட்டது!

மூங்கில் கழிகளுக்குப் பதில் இரும்புக் குழாய்கள்—மண் சுவருக்குப் பதில் செங்கற் சுவர்—தென்னங்கீற்றுகளுக்குப் பதில் அஸ்பெஸ்டாஸ் பலகைகள்!

தீயினுல் தீண்டமுடியாதவை—கனத்த மழையையும் தாங் கக்கூடியவை—இப்புதிய குடியிருப்புக்கள்!

இன்னும் மூன்ருண்டுக் காலத்துக்குள் சென்னை நகரத்தில் தென்னங்கீற்ருலும் மண் சுவராலும் ஆக்கப்பட்ட குடிசைகளை, அறவே இல்லாமல் செய்ய முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் திட்டமிட்டிருக்கின்ருர். 'நிறைவேற்றப்படுமா'—என்று அரசியல் காழ்ப்பின் காரணமாக, ஒருவர் இருவராவது கேட்கின் றவர்கள் இல்லாமலா இருப்பார்கள்?

இப்படிக் கேட்கின்ற 'சந்தேகப்பிராணி'கள் கேட்டுக் கொண்டே இருக்கட்டும். அவர்கள் செய்யக்கூடிய சலசலப்புக் கிடையில்தான், முதலமைச்சர் அண்ணு தீட்டியிருக்கின்ற புரட்சி கரமான திட்டம், முழு அளவில் வெற்றிகரமாக நிறைவேறும் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

இப்பொழுது நடைபெற்றிருக்கின்ற கொள்ளிவைப்பு, கொடுமைமிக்கது—ஆயிரக்கணக்கான குடிசைவாழ் மக்களை, துன் பத்திலும் துயரத்திலும் மூழ்கடிப்பதாகும். குடியிருப்புக்களை இழந்து வேதனையில் மூழ்கி நடுத்தெருவில் நின்றுகொண்டிருப்பதற் கும், புதிய குடியிருப்புக்களில் அந்த அபலைகள் நுழைவதற்கும் இடையிலிருக்கின்ற நாட்களில் அவர்கள் ஏற்றுள்ள நெஞ் சக் குமுறலைச் சித்தரிக்கத் தமிழில் சொற்கள் இல்லை. அதே மக் கள், புதிய குடியிருப்புக்குள் நுழைகின்றபொழுது, அம்மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கத்தானே செய்யும்! அவர்கள் தங் களையும் அறியாமல், 'தீமையில் ஏற்பட்டநன்மை' என்றே பூரிப்பு டன் கூறுவர்—இத்தகைய நிலையான நன்மையைத் தேடித் தந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களை உளமார வாழ்த்தவும் வாழ்த்துவர்.

—கா. க.

காங்கிரசு உறுப்பினரிடம் தகவல் இருக்கிறதா?

கே. விஞயகம்:— "இப்போது தமிழ்நாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் மூலம், அரிசி கேர ளத்திற்குச் சென்று அங் கிருந்து இலங்கைக்குச் செல் வதாகச் சொல்லப்படுகிறதே —இதனைத் தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?"

முதலமைச்சர் அண்ணு:— "கனம் உறுப்பினர், தமது கேள்வியில், இப்படிச் சொல் லப்படுவதாகக் கூறுவதி லிருந்தே, அவருக்கு அந்தக் கள்ளக்கடத்தல் பற்றித் தெரியும் போலிருக்கிறது. அந்தத் தகவல் அவரிடத் திலே இருந்தால் கொஞ்சம் அரசுக்குக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்."

—(சட்டமன்றத்தில்: 12-7-67)

12,000 ஏக்கர்களில் இருகுருவை சாகுபடி

சேலம், ஜுலை 11—

"கிருஷ்ணகிரி வட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கர்களில், இரண்டு குறுவை சாகுபடிகள் செய்யத் திட்டமிட்டு வேலை துவங்கப் பட்டுவிட்டது"

என்று, தர்மபுரி கலெக்டர் செய்தி யாளர்களிடம் கூறினுர்.

இங்கு 'ஏ. டி. டி. 27' வகை நெல் பயிரிடப்படும்.

விவசாயிகளுக்குக் கடன் உதவி யளிக்க ரூ. 6,00,000 ஒதுக்கப்பட் டுள்ளது.

பெட்ரோல் பங்கீடு?

புதுடில்லி, ஜுலை 11—

சூயஸ் கால்வாய் எவ்வளவு காலம் மூடப்பட்டிருந்தாலும் பெட் ரோல் பங்கீட்டு முறையை மேற் கொள்ள வேண்டிய அவசிய மிராது எனத் தெரிகிறது.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை களுக்கான குரூட் எண்ணெய், குவாயத்—ஈரான்—சவூதி அரே பியா ஆகிய நாடுகளிலிருந்து வரு வதால், பெட்ரோல் வழங்குவதில் தட்டுப்பாடு ஏற்படாது எனத் தெரிகிறது.

2-இலட்சம் டன் கோதுமை இந்தியாவுக்குக் கிடைக்கும்?

புதுடில்லி, ஜுலை 11—

"இந்த ஆண்டில் இந்தியாவுக்கு அதிகப்படியாக 2,00,000 டன் கோதுமை கிடைப்பதற்காக இரஷ்யாவுடன் இந்தியா பேச்சு வார்த்தை நடத்தியது"

என்று அண்மையில் மாஸ்கோ சென்றுவந்த இத்திய வெளி நாட்டுச் செயலர் சி. எஸ். ஷா, ரஷ்ய அதிகாரிகளுடன் கலந்து பேசியதிலிருந்து தெரிகிறது.

தொழிலாளர் பிரச்னைக்கு சட்டம் ஒரு பரிகாரம்

அமுலாக்கும் வன்மையற்ற சட்டங்கள் பயனற்றவை

அமைச்சர்கள் செ. மாதவன் விளக்கம்

சென்னை, ஜுலை 11—

"தொழிலாளர் சட்டங்களை ஒழுங்குபடுத்தும யோசனை யைத் தமிழக அரசு ஆதரிக்கிறது. எல்லாத் தொழி லாளர் பிரச்சினைகளுக்கும், சட்டம் ஒரு பரிகாரம் எனப் பொதுவாக நம்பப்படுகிறது; ஆனுல் அவ்வாறு இல்லை. அமலாக்கும் வன்மை இல்லாத தொழிலாளர் சட்டங்கள் பயனற்றவை; அவை மேலும் சிரமங்களை உண்டாக்கும்.

"மாநிலத்தில் உள்ள 304 எஞ்சினீயரிங் தொழிற்சாலை களில் 215 ஆலைகள் மத்திய ஊதிய போர்டு சிபாரிசு செய்த இடைக்கால நிவாரணத்தைத் தொழிலாளர் களுக்கு அளிக்கவில்லை; இந்த நிவாரணம் பெற வேண்டிய 66,901 தொழிலாளர்களில் 48,838 பேருக்கு அது கிடைக்கவில்லை; காலதாமதமின்றி எஞ்சினீய ரிங் தொழிலாளருக்கு இடைக்கால நிவாரணம் அளிக் கச்செய்ய ஆரசு நடவடிக்கை எடுத்துவருகிறது"

என்று சட்டமன்றத்தில், சட்ட அமைச்சர் செ. மாதவன், தமிழக அரசின் தொழிலாளர் கொள்கை பற்றி அறிக்கை ஒன்று வெளி யிடுகையில் விளக்கினுர். அவர் மேலும் கூறியதாவது:—

ஒரே ஒரு வழிதான் உண்டு!

ஒரு தொழிலில் இரகசிய ஓட்டு மூலம் தொழிலாளர் கமிட்டி ஒன்றை தொழிலாளர்கள் நிய மிக்க வேண்டும்; தொழிலாளர் நலனை கவனித்துக்கொள்ள அக் கமிட்டிக்கு அதிகாரமளிக்கப் பட வேண்டும்.

சில சங்கங்களில் ஒன்றை இரக சிய ஓட்டுமூலம் தேர்ந்தெடுப் பதால், மற்ற சங்கங்களும் இருக்கும்; ஆனுல், பேச்சு வார்த்தை நடத்த அவற்றுக்கு அதிகாரம் இருக்காது!

கூட்டுப் பேர முறை கண்கூடான முறையில் இருக்க வேண்டு மானுல், அதற்கு ஒரே வழி, தொழிலாளர் கமிட்டியை தேர்ந்தெடுப்பதுதான்.

சூழ்நிலையை உருவாக்குக!

நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த பல சங்கங்களில் எந்தச் சங்கத்துக்கு அதிகாரம் உள் ளது என்பது பற்றித் தகராறு ஏற்படுகிறது.

பல சங்கங்கள் இருப்பதால், தொழிலாளர்களின் பேரம் பேசும் வலிமை குறைகிறது. ஒரு தொழிலில் ஒரே ஒரு சங்கம் இருப்பதற்கான சூழ்நிலையை உண்டாக்க அரசு முயற்சிக்கும்.

'நிர்ப்பந்த முறை'கட்கு இடமிருக்கக்கூடாது!

'கேரோ' சட்டவிரோதமான நட வடிக்கை; அது, நியாயமான தொழிற்சங்க நடவடிக்கையல்ல!

தொழில் உறவில் நிர்ப்பந்தமுறை களை அரசு கண்டிக்கிறது.

ஆனுல்: தொழில் தகராறுகளை வெறும், அமைதி விஷயமாக இந்த அரசு கருதாது என்பதை வலியுறுத்துவது அவசியம்.

'கேரோ'க்கள் பொறுத்துக் [illegible] ளப்படமாட்டாது; [illegible] தொழிலாளர் சட்டங்க[illegible] பந்தங்கள்—தீர்ப்புக்க[illegible] ஊதிய போர்டு சிபாரிசுகள் [illegible] யவற்றை முதலாளிகள் மீ[illegible] வதையும் அரசு பொறுத்து[illegible] கொள்ளாது.

பயனுள்ள முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்

1966-ல் தொழில் தகராறுகள் எண்ணிக்கை 1,000 அதிகரித் தது!

வேலை நிறுத்தங்கள்—கதவடைப்பு கள்—வேலை நாட்கள் இழப்பு ஆகியவையும் அதிகரித்தன!

தொழில் தகராறுகளின் மூன்றில் இரண்டு பங்கு, பொருளாதாரக் காரணங்களுக்காக ஏற்பட வில்லை.

தொழிற்சாலைகளில் குறைகளைக் கவனிக்கும் சாதனம் இருந்திருந் தால் தகராறுகளைத் தவிர்த் திருக்க முடியும்.

குறைகளைக் கவனிக்கும் நடை முறையைப் பயனுள்ளதாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும்.

தகராறுகளைத் தீர்ப்பதில், சட்ட பூர்வமற்ற பஞ்சாயத்துத் தீர்வு முறையை முதலாளிகள் எதிர்ப் பது ஏன் என்பதை அரசு ஆராய்ந்து, சட்டபூர்வமற்ற பஞ்சாயத்துத் தீர்வு முறையில் மேலும் தகராறுகளைத் தீர்க்க முயற்சிக்கும்.

இனி தீவிர கவனம்

தனியார் துறை, அரசுத் துறை களில் கூட்டு—நிர்வாகக் கவுன் சில்களை நிறுவுவதிலும் அரசு தீவிர கவனம் செலுத்தும்.

இந்த மாநிலத்தில் தனியார் துறை யில் 16 ஆலைகளிலும், கூட்டுற வுத் துறையில் 2 ஆலைகளிலும் அவை உள்ளன.

சிறு துறைமுகங்களில் படகு வேலை செய்யும் தொழிலாளருக் கும், தங்க ஆபரணத் தொழி லாளருக்கும் குறைந்தபட்ச ஊதி யம் நிர்ணயிப்பதுபற்றி அரசு யோசித்துவருகிறது.

அறிவிப்புமூலம் எண்ணெய் மில் களில் வேலை செய்வோருக்குக் குறைந்தபட்ச ஊதியத்தின் அதிகபட்ச அளவை மாற்றும் பிரச்சினை, அரசின் பரிசீலனை யில் இருக்கிறது."

சூப்பர் மார்க்கெட்டின் எதிர்காலம்?

நீடிப்பதா இல்லையா என்பதை ஆராயக் குழு

சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஜூலை 12—

'சூப்பர் மார்க்கெட்' எனப்படும் சிறப்பு அங்காடி பற்றி இன்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகட்கு, சட்டத்துறை அமைச்சர் திரு. மாதவன் பதிலளித்துக்கொண்டிருந்தபோது, முதலமைச்சா அறிஞர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டுப் பின்வருமாறு கருத்தறிவித்தார்கள் :—

"இந்தச் சிறப்பு அங்காடி ஏற்பாடு, முன்னால் இருந்த அரசினால் ஏற்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு திட்டமாகும்.

"பொருள்கள் நிறைய இருந்து விற்க வாய்ப்பில்லாமல் இருக்குமானால், அவற்றை விற்பதற்கு ஒரு வாய்ப்பாக இப்படிப்பட்ட சிறப்பு அங்காடிகள் துவக்கப்படுவதால் நல்ல பலன் கிட்டும். இங்கே பொருள்கள் கிடைக்கவும், மலிவு விலையில் நியாயமான முறையில் கிடைக்கவும் திறக்கப்பட்டிருக்கிறது. இது பயனுள்ளதாக இருக்குமா என்பதை, ஓராண்டுக்கால அனுபவத்தைக் கொண்டு ஆராய ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் பரிசீலனையைப் பொறுத்து இந்த அங்காடிகளைத் தொடர்ந்து நீடித்து நடத்தலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்ய இந்த அரசு கருதுகிறது.

"இப்படி ஒரு பெரிய நகரத்தின் மையத்தில் ஒரே இடத்தில் மட்டும் ஏராளமான பொருட் செலவில் சிறப்பு அங்காடியைத் திறப்பதற்குப் பதிலாக, டெல்லியில் இருப்பதைப்போல நகரின் பல பகுதிகளிலும் சிறு சிறு அளவில் கடைகளைத் திறந்து எல்லோருக்கும் எளிதில், எல்லாப் பொருள்களும் கிடைக்கும் படியாகச் செய்வது பயனுள்ளதாக இருக்குமா என்பதையும் அரசு ஆராய்ந்துவருகிறது."

கிண்டியில் உள்ள கணித ஆராய்ச்சி நிலையம்

ஆசியாவிலேயே சிறந்தஒன்று

சென்னை, ஜூலை 11—

"கிண்டியில் உள்ள கணித இயல் ஆய்வு நிலையத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி, அணுசக்தி ஆராய்ச்சிக்கு உதவக்கூடியதாக இருக்கிறது; ஆசியாவிலேயே இரண்டாவது சிறந்த ஆராய்ச்சி நிலையமாகும் இது; இந்த நிலையத்தின் பணிகளை ஆராய டாடா நிறுவனத்தின் எஞ்சினீயரான திரு. எஸ்.ஜி.கே. மேனன் அனுப்பப்பட்டார்; அவர் வந்து பரிசீலனை செய்து தமது அறிக்கையைத் தயாரித்துவருகிறார். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்படும் நல்ல பல முடிவுகளை உலகின் மற்ற நாடுகளில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களெல்லாம் ஏற்றுப் பாராட்டிப் பயன்படுத்திக்கொள்கின்றன."

மேற்கண்ட தகவல்களை, சட்டமன்றத்தில், கல்வி — தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வெளியிட்டார்.

தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் வள ஆய்வு

சென்னை, ஜூலை 11—

நமது மாநிலத்தில் நாகை வட்டத்திலும், காரைக்கால் பகுதியிலும் எண்ணெய் வள ஆய்வு நடைபெற்று வருவதாகவும், திருப்பூண்டி, கந்தர்வக்கோட்டை, திட்டக்குடி, காரைக்கால் முதலிய இடங்களில் தரையில்துளைபோட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது என்றும், இன்னும் எண்ணெய் கிடைப்பதற்கான கூறுபாடுகள் தென்படவில்லை என்றும் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

முந்திய அரசு புரிந்த கெடுதல்கள் இந்த அரசைத் தாக்குகின்றன!

காண்டிராக்டர்கள் தவறால் பள்ளித் தேர்வு தள்ளிப்போடப்பட்டது

சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 10—

கேள்வித் தாள்கள் வந்து சேரக் காலதாமதம் ஏற்பட்டதால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசினர் பள்ளிகளில் 9—4—67-ல் நடைபெற்றிருக்கவேண்டிய தேர்வுகள் தள்ளிப் போடப்பட்டு 20—4—67-ல் நடைபெற்றது என்றும், ஒரத்தநாட்டில் கேள்வித் தாள்கள் களவு போய்விட்டதாக அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், கேள்வித் தாள்கள் வந்து சேருவதில் காலதாமதத்திற்குக் காரணம் அச்சிட்டு அனுப்பவேண்டிய காண்டிராக்டர்கள் உரிய நேரத்தில் அனுப்பாததால், இரயில்வே வாகன்களில் அவை காலந்தாழ்ந்துவர நேர்ந்தது என்றும், இதற்குக் காண்டிராக்டர்களே பொறுப்பு என்றும் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில், கே. விநாயகம் கேள்விக்குப் பதிலளித்தார்.

கே. விநாயகம் :—"இதுபோல் ஏற்கனவே எப்போதுமே நடந்ததில்லை; இப்போது இந்த ஆட்சியில் நடக்கக் காரணம் என்ன ?"

அமைச்சர் :—"இது நடைபெற்றது இந்த ஆட்சியில் என்றாலும், இது தொடர்பான செயல்கள் முந்திய அரசிலேயே துவங்கியதாகும். தேர்வு 9—4—67-ல் என்றால், அதற்கான கேள்வித் தாள்கள் அச்சிடும் காண்டிராக்டுகள் ஆறு மாதத்துக்கு முன்பே முந்திய அரசினால் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். அந்தக் காண்டிராக்டர்கள்தான் காலதாமதத்திற்குக் காரணம் என்பதால், முந்திய அரசின் கெடுதல்களே இந்த அரசைத் தாக்குகின்றன. 'ஏற்கனவே இதுபோல் நடந்ததே இல்லை' என்று உறுப்பினர் கூறுகிறார். அப்படி 20 ஆண்டுக் காலத்தில் எத்தனைநடந்திருக்கின்றனஎன்று பட்டியல் வேண்டுமானால் தயாரித்து அவையில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்."

மதுவிலக்குச் சட்டம்

தளர்த்த இரு மாநிலங்களில் காங்கிரசு அரசுகள் முடிவு

மத்தியப் பிரதேசமும், மைசூரும் சில பகுதிகளில் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்துவதற்கு முடிவு செய்துள்ளன.

"மத்தியப் பிரதேசத்தில் ஆறு மாவட்டங்களில் முழு அளவிலும், நான்கு மாவட்டங்களில் சில பகுதிகளிலும் மதுவிலக்கு ரத்து செய்யப்படும்"

என, நிதி அமைச்சர் கே. எல். துபே, சட்டமன்றத்தில் அறிவித்தார்.

மைசூர் மாநிலத்திலும் சில குறிப்பிட்ட பகுதிகளில் மதுவிலக்கை ரத்து செய்ய அரசுக்கு சட்டமன்றம் அதிகாரமளித்தது.

உ. பி. மாணவர்களின் ஆங்கில ஆர்வம்!

லக்னோ பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புக்காகச் சேரும் மாணவர்களில் பெரும்பாலோர், பொது ஆங்கிலப் பாடத்தை விரும்பித் தேர்ந்தெடுத்துள்ளனர்.

"உத்தரப் பிரதேச மாநில உயர்நிலைப் பள்ளி, இண்டர்மீடியட் பரீட்சைகளுக்கு ஆங்கிலம் விருப்பப்பாடமாக்கப்பட்டுவிட்டது என்றாலும், ஆங்கில வகுப்புகளில் சேர முன்வரும் மாணவர் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை" என்று கல்லூரிகளின் முதல்வர்கள் கூறினர்.

எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும், ரூர்க்கி எஞ்சினீயரிங் பல்கலைக் கழகத்திலும், கான்பூரிலுள்ள இந்தியத் தொழில் நுட்பக் கழகத்திலும் ஆங்கிலமே போதனமொழியாக இருந்து வருவதே அதற்குக் காராணமாகும். இக் கல்வி நிறுவனங்கள், பரீட்சை நடத்தி அந்த அடிப்படையில்தான் மாணவரைச் சேர்த்துக்கொள்கின்றன. அப்பரீட்சைக்கான எல்லா கேள்வித் தாள்களும் ஆங்கிலத்தில்தான் உள்ளன.

ரூ. 210 கோடி நட்டம்!

ரோம், ஜூலை 11—

"அரபு நாடுகள் விதித்த எண்ணெய்த் தடையினால், எண்ணெய் எடுக்கும் அரபு நாடுகளுக்கு ஏற்பட்ட மொத்த இழப்புச் சுமார் ரூ. 210 கோடிக்கு அதிகமாயிருக்குமாம்.

லிபியாவின் இழப்பு மட்டும் நாளொன்றுக்குச் சுமார் ரூ. 3 கோடியே 15 இலட்சமாம்.

"குவைத்தின் எண்ணெய் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளதால், அந்நாட்டிற்குச் சுமார் ரூ. 63 கோடி இழப்பாகும்" என்று மதிப்பிடப்பட்டுள்ளது; அதாவது, நாள்தோறும் சுமார் ரூ. 2 கோடியே 10 இலட்சம் நட்டமாகும்.

"இச்சிக்கலினால் தனது வருவாயில் சுமார் ரூ. 23 கோடியே 10 இலட்சம் இழப்பாகிவிட்டது" என்று இம்மாதத் தொடக்கத்தில் சவூதி அரேபியா அறிவித்தது.

எண்ணெய்த் தடையை மாற்றும் மனப்போக்குத் தோன்றியிருப்பதற்கான அறிகுறிகள் பல்வேறு நாடுகளிடம் காணப்படுகின்றன.

எழுச்சி நாள்

தமிழரசுக் கழக அறிவிப்பு

சென்னை, ஜூலை 10—

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அறிவிப்பதாவது :—

"சேலம் இரும்பு உருக்காலைத் திட்டத்தையும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தையும் நிறைவேற்றுமாறு மத்திய அரசை வற்புறுத்தி ஜூலை 23-ல் தி. மு. கழகம் கொண்டாடவிருக்கும் எழுச்சி நாளில் தமிழரசுக் கழகக் கிளைகளும், பேச்சாளர்களும் கலந்துகொள்ளக் கோருகிறேன்.

"சேலம் இரும்பு உருக்காலை மத்திய அரசின் திட்டமாகவே நிறைவேற்றப்படவேண்டுமென்று தமிழரசுக் கழகம் ஆரம்ப முதலே வற்புறுத்தி வருகின்றது. இந்தப் பிரச்சினை, கட்சி வேற்றுமை கடந்த தமிழகத்தின பொதுப் பிரச்சினையாகும். இதற்காக முன்னின்று கிளர்ச்சி நடத்தும் ஆளுங்கட்சியான தி. மு. கழகமே பொறுப்பேற்றது வரவேற்கத்தக்கதாகும்.

"எழுச்சி நாளில் நடைபெறும் கூட்டங்களில் தமிழரசுக் கழகப் பேச்சாளர்கள் கலந்துகொள்ள வேண்டும்."

திருப்பூர் நகரத் தொழிலாளர்கட்கு:

திருப்பூர் நகரில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 60 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; அந்த வீடுகள் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

குழுவில் தொழிலாளர்களின் சார்பில் தோழர்கள் இரா. முருகேசன், ஏ. கணபதி, பி. வேலுச்சாமி எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

குழு கூடி முடிவு செய்வதற்கு முன் வீடு தேவைப்படும் தொழிலாளர்கள் (பஞ்சாலையில் பணியன் தொழிலாளர் மட்டும்) உடன் விண்ணப்பம் அனுப்பலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :—

தொழிலாளர் துறை அலுவலர்,
தபால் பெட்டி எண் 129,
கோவை.

முந்திய அரசு நிறுவிய தீப்பெட்டித் தொழிற்சாலை வரலாறு

சட்டமன்றத்தில் அமைச்சர் தந்த தகவல்

சென்னை, ஜூலை 11—

"அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வந்த 'சுடர்' தீப்பெட்டித் தொழிற்சாலை, 1956 முதல் 1961-வரை சென்னையில் நடைபெற்றது. எதிர்பார்த்த பலன் கிட்டாததாலும், இலாபம் இல்லாததாலும் அது 1962-ல் காஞ்சிக்கு மாற்றப்பட்டது. அங்கு கூட்டுறவுத் துறையில் அது துவக்கப்பட்டது. இதுவரை நஷ்டத்திலேயே இயங்கிவந்தபோதிலும், இவ்வாண்டில் சிறிது இலாபம் கிடைக்கும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது"

என்று சட்டமன்றத்தில், தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

கே. விநாயகம் :—"நஷ்டம் ஏற்பட்டதற்கு யார் பொறுப்பாளி?"

பதில் :— "இத்தொழிற்சாலையைப் பெரம்பூரில் வைத்ததுதான் தவறு. அங்கு வேறு பல தொழில்கள்—அதிக வருமானம் தரக்கூடிய தொழிற்சாலைகள் இருப்பதால், இத்தொழிலில் ஈடுபட்டுக் கூலி வேலை செய்யத் தேவையான நபர்கள் முன்வரவில்லை. எனவே, கிராமப்புறங்களையொட்டி, இதை,வைத்திருந்தால், கிராமத்தில் உள்ள பெண்கள் இதில் ஈடுபட்டிருக்கக் கூடும். காஞ்சீபுரத்தில் இதற்கு நல்ல சூழ்நிலை இருக்கும் என்று கருதித்தான் அங்கு மாற்றப்பட்டது."

கேள்வி :— "காஞ்சீபுரத்திலும் நஷ்டம் ஏற்பட்டதேன் ?"

பதில் :—"அங்கு இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் அளவுக்கு உற்பத்தி செய்யப்படாததே காரணம். இந்த ஆண்டு ஓரளவு இலாபம் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

வேண்டுகோள் பலனளிக்கவில்லை!

புதுடில்லி, ஜூலை 11—

"பாகிஸ்தானில் இன்னும் காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தியர்களை விடுதலை செய்யும்படி பாகிஸ்தான் அரசுக்கு விடுத்த வேண்டுகோள் பலனளிக்கவில்லை"

என்று, வெளிநாட்டுத்துறை அமைச்சர் சாக்ளா நாடாளுமன்றத்தில் கூறினார்.

பாகிஸ்தானில் 79 இந்தியர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் 18 வயதுகூட ஆகாதவர்கள்.

மதுரைப் பல்கலைக்கழக 'செனட்' உறுப்பினர் தேர்வு

சென்னை, ஜூலை 11—

தமிழக சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து திரு. எம். எஸ். சிவசாமி, திரு. ம. பொ. சிவஞானம், திரு. என். சௌந்தரபாண்டியன் ஆகியோர், மதுரை பல்கலைக்கழக 'செனட்'டுக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நூல் விலையைக் குறைக்கத் தமிழக அரசு முயற்சி

நடவடிக்கை எடுக்க டெல்லியிடம் தூண்டுதல்

சட்டமன்றத்தில் தொழிலமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 11—

"நூல் விலையைக் குறைக்க மத்திய அரசு மூலம் மாநில அரசு தொடர்ந்து முயற்சி செய்துவருகிறது"

என்று சட்டமன்றத்தில், தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

பல துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"பஞ்சு விலை ஏறியதாலும், கூலிகள் உயர்ந்ததாலும் மேலும் பஞ்சுமீது, 'எக்சைஸ்' வரி விதிப்பது ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டிருப்பதாலுமே நூல் விலை ஏறியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதைக் குறைக்க மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"பஞ்சு இறக்குமதியை அதிகரிப்பதன் மூலமும், பஞ்சு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும், நூல் விலையைக் குறைக்க மத்திய அரசின்மூலம் நடவடிக்கை எடுக்க மாநில அரசு முயன்று வருகிறது.

"மேலும், கைத்தறியாளர்கட்கு நூற்பாலைகள் மூலம் அதிக நூல் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளில் 75 சதவீதம் கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. மீதி 25 சதவீதம்தான் வெளிச்சந்தையில் விற்க அனுமதிக்கப்படுகிறது.

"கூட்டுறவு நூல் விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் காஞ்சியில் திறக்கப்பட்டது. அது வெற்றிகரமாக இயங்குமானால் மேலும் பல நிலையங்கள் திறக்கப்படும்."

கழகத் தோழரைத் தாக்கியவருக்கு தண்டனை

அரியலூர் நகர தி.மு.க. உறுப்பினரும் 'நம் நாடு' விற்பனையாளருமான ஏ. ஆறுமுகத்தின் கடை, சினிமா தியேட்டர் அருகில் உள்ளது.

ஜெயராமன் என்பவர் தன் தகப்பனார் மாணிக்க படையாச்சியுடன் 18—3—67 அன்று ஆறுமுகம் கடைக்கு வந்து கலவரம் செய்தாராம். கடையிலிருந்த சர்பத் பாட்டிலை எடுத்து ஆறுமுகம் மீது, ஜெயராமன் அடித்தாராம்; இதனால் ஆறுமுகத்திற்குக் காயமேற்பட்டது.

ஆறுமுகத்தின் புகார்மீது அரியலூர் போலீசார் பெரம்பலூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஜெயராமன், மாணிக்கபடையாச்சி ஆகிய இருவர் மீதும் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரணை செய்த சப்-மாஜிஸ்திரேட், ஜெயராமனுக்கு ரூ. 50 அபராதம் விதித்தும், மாணிக்க படையாச்சியை விடுதலை செய்தும் தீர்ப்புக் கூறினார்.

25.74 இலட்சம் பேர் வேலை கோருகின்றனர்!

1966-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய வேலை தேடித்தரும் நிலையங்களில், 9.17 இலட்சம் பேர் பதிவு செய்திருக்கின்றனர். இவர்களில் 94,000 பேர் பட்டதாரிகள்.

1967 பிப்ரவரித் திங்கள் 25.74 இலட்சம் பேர் வேலை கோரியிருக்கின்றனர். இதில் 2.60 இலட்சம் பேர் பெண்கள்.

‘ஆழ்ந்து சிந்தித்தே ஆவன செய்வோம்’

‘நிர்வாகம் சரியாக இயங்கினாலன்றி திட்டங்களால் பலனிருக்காது’

முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஜூலை 12—

“கிராம அடிப்படையில் நிர்வாகம் நடந்து மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டால்தான், அரசின் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படும்.

“மனித உடலில் நரம்புகளும், இரத்தக் குழாய்களும் இயங்கினால்தான், உடல், வேண்டிய காரியத்தை ஒழுங்காகச் செய்யமுடியும்.

“அதுபோல், கிராமப்புறங்கள், பிர்க்காக்கள், தாலுகாக்கள், மாவட்டங்கள் என்பவை—இரத்தக் குழாய்களையும் நரம்புகளையும் போல்—நிர்வாகம் சீராக இயங்க அமைக்கப்பட்டவை; இவை சரியாக இயங்கினாலன்றி, சில திட்டங்கள் போடுவதால் பலன் இருக்காது’

“ஆகவே, இந்த வகையில் நாம் செய்யவேண்டிய திருத்தங்கள் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவையாகும்.

“ஒரு அதிருப்தி ஏற்பட்டவுடன் அவசர முடிவு செய்து மாற்றிவிட்டு, அதன்பின், ‘முன்பு இருந்ததே தேவலை’ என்ற எண்ணத்திற்கு நாம் வந்துவிடக்கூடாது; ஆகவேதான் இந்த அரசு ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது”

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில்’ மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது :—

சிறந்த ஆட்சி முறை

“கிராமங்கள், பிர்க்காக்கள், தாலுகாக்கள், மாவட்டங்கள் என்ற அமைப்பு முறை, வெள்ளையர்களால் ஏற்படுத்தப்பட்டவை; அவை சரியாக இயங்கவில்லை என்று கூறுவதும் சரியல்ல.

“தமிழகத்தைப் பொறுத்தவரையில், சோழ மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட நிர்வாக முறைதான் இப்பொழுதும் அமுலில் இருப்பதாகக் கருத வேண்டும்.

சோழ மன்னர்கள், நாட்டு நிர்வாக வசதிக்காகப் பல ஊர்களைச் சேர்த்து, ‘கோட்டம்’ என்றும், பல கோட்டங்கள் சேர்ந்தது மண்டலம் என்றும், பல மண்டலங்களைச் சேர்த்து ‘நாடு’ என்றும் அமைத்தார்கள்.

தமிழக மன்னர்கள் ஆட்சி இன்னும் சிறந்து இருந்ததற்குக் காரணம், ‘நாட்டை நிர்வாக வசதிக்காக பல அமைப்புக்களாகப் பிரித்து இணைப்பு ஏற்படுத்தி, அவை சீராக இருக்கின்றனவா என்றும் பார்த்துக் கொண்டதுதான்’ என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சோழ மன்னர்கள், நிர்வாகத்துக்கு வசதிக்காகப் பல்வேறு வகையான காரியங்களை வகுத்து வைத்திருந்தார்கள்; ஒவ்வொரு இலாகாவுக்கும் குழுக்கள் இருந்தன.

உயிர்ச் சக்தி உண்டா?

கிராமங்களில் முன்பு இருந்தது போல் இன்று உயிர்ச் சக்தி இல்லை.

அன்று கிராம நிர்வாகத்தில் காட்டியது போன்ற ஆர்வத்தை இன்று மக்கள் காட்டவில்லை.

முன்பு கிராமத்தில் மதகு உடைந்துவிட்டது என்றால், கிராம மக்களே ஒன்று திரண்டு அதைச் செப்பனிடுவார்கள்.

ஆனால் இன்றையத் தினம், ‘அரசின் மானியத்தையும், கடனையும் பெற்றுத்தான் செய்ய வேண்டும்’ என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலை மாற சிரணி!

இந்த நிலை மாறவேண்டும்; கிராம வேலைகளில் மக்கள் ஆர்வம் காட்டவேண்டும். அப்படிப்பட்ட உணர்ச்சியைச் செயல் முறையில் தூண்டவே ‘சிரணிப் படை’ பயன்படும்.

சிரணிப் படை மாவட்டந்தோறும் மட்டுமன்றி, கிராமத்திற்குக் கிராமம் அமைந்தால்தான் இந்த மாதிரி காரியங்களை நிறைவேற்ற முடியும்.

சிரணியாலும், கிராமத் தொண்டர் படையாலும் நிறைவேற்றப்பட முடியாத காரியங்களில்தான் அரசு கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

வருவாய் அடிப்படையில் திருத்தியமைப்போம்!

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து இருக்கவேண்டும் என்று பஞ்சாயத்துக்களை ஏற்படுத்திவிட்டோம்; ஆனால், பல பஞ்சாயத்துக்கள் சிறிய கிராமங்களில் இருப்பதால், அவற்றின் வருவாயைக் கொண்டு செய்யவேண்டிய காரியங்களைச் செய்வதற்கான வாய்ப்பு இல்லை.

இப்படி இருக்கின்ற கிராமங்களையெல்லாம் வருவாய் அடிப்படையில் திருத்தியமைக்க அரசு முற்படும்பொழுது, அதை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசும் துணிந்து செயல்பட முடியும்.

ஒப்பந்தம் ஏற்பட்டால்!

நிர்வாக வசதிக்காக மாற்றங்களைச் செய்யும்பொழுது அரசியல் கட்சிகள் பெருந்தன்மையான ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்; ‘இந்த மாற்றங்களை அரசியல் கட்சி நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம்’ என்ற ஒப்பந்தம் ஏற்பட்டால் அரசினரும் எளிதாக மாற்றங்களைச் செய்யலாம்.

இந்த மாதிரி ஒப்பந்தம் ஏற்படாவிட்டால், அரசு, மாற்றங்களைச் செய்யாது என்று எண்ணவேண்டாம்; மாற்றங்களைச் செய்வதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும்.

கள்ளக்கடத்தல் வாகனம் பறிமுதலாகும்

அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 12—

“அரிசி, நெல் கள்ளக்கடத்தலில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்யவும், கள்ளக்கடத்தலில் ஈடுபடுவோருக்குச் சிறைத் தண்டனை அளிக்கும் வகையிலும் விதிமுறைகளைச் சேர்த்துச் சட்டத் திருத்தம் செய்வது குறித்து இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது”

என்று, இன்று சட்டமன்றத்தில் உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், திரு. ஏ. எம். இராசா கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

உயிருள்ள அமைப்பாக மாற்ற முயலுவோம்!

மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை உயிருள்ள அமைப்பாக மாற்றி அமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. அவற்றை மாற்றியமைக்கும் போது, ஓர் ஆட்சி மன்றம் போன்றே நடத்தப்படும்.

குழுக் கூட்டத்தில் கேள்விகள் கேட்டுப் பதில்கள் பெறலாம்; ஆனால், அங்கேயே உடனுக்குடன் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்பதை அரசு ஒப்புக்கொள்ளாது.

கிராம அதிகாரிகள் மனப்பான்மை மாற!

கிராம அதிகாரிகளுக்குத் தரப்படும் சம்பளம் குறைவானது; ஆகவே, அவர்கள் ரூ. 5—10 வாங்குவதை மரபாகவும் உரிமையாகவும் கருதுகிறார்களே யன்றி, ‘இலஞ்சம்’ என்று கருதவில்லை. கிராம அதிகாரிகளிடம் இந்த மனப்பான்மைதான் நிலவுகிறது.

ஆகையால், ‘ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் அதிகாரி இருக்க வேண்டும்’ என்ற நிலையை மாற்றி, பல கிராமங்களைச் சேர்த்து ஒரு கிராம அதிகாரியை நியமித்தால் உள்ளபடி வேலைகளும் நல்லபடி நடக்கும்; ‘ஊதியம் குறைவு’ என்ற குறைபாடும் இருக்காது.

இதுபற்றி எல்லாக் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் அறிந்து செய்ய வேண்டும் என்று யோசித்துக்கொண்டிருக்கின்றேன்.

உணர்ச்சிகளின் வடிவங்கள்!

இப்போதுள்ள கலெக்டர்களில் ஒருவர் இருவர் தவிர மற்றவர்கள் எதையாவது செய்தே தீர வேண்டும் என்று எண்ணுகின்ற வாலிபப் பருவம் உள்ளவர்கள்!

‘அவர்களுக்கு அனுபவம் இல்லை’ என்று சொல்ல முடியாது. அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகின்ற பருவம் வாலிபப் பருவம்!

வயோதிகரிடத்தில் அனுபவம் இருக்கிறது; ஆனால் அந்த அனுபவத்தைச் செயல்படுத்த அவர்கட்கு உடலிலோ உள்ளத்திலோ தெம்பு இருக்க முடியாது.

ஆகவே, 40—45 வயதிற்குள் உள்ளவர்கள் மாவட்டக் கலெக்டர்களாக இருக்கின்ற இடங்களில் சுறுசுறுப்பாக வேலை நடைபெறுகிறது.

சேவகன் வந்து சொன்னால்தான், ‘அவர் கலெக்டர்’ என்று தெரிந்துகொள்ள முடியும். அவ்வளவு எளிமையாக, இந்தச் சமுதாயத்தின் புதிய உணர்ச்சியின் வடிவங்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் மேலும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்க வேண்டும். அவர்களிடம் தனிப்பட்ட மனுக்களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு போகக்கூடாது.”

வானொலியில்

அமைச்சர்

சத்தியவாணி முத்து

சென்னை தீ விபத்து நிவாரண நிதிக் குழுத் தலைவர் என்ற முறையில், தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பணிகள் குறித்தும், நிவாரண நிதியைத் தாராளமாக அளிக்குமாறு பொதுமக்களை வேண்டிக் கேட்டுக்கொண்டும் தமிழக அரசு அரிசன நல—செய்தித் துறை அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் 14—7—67 இரவு 7-மணிக்கு சென்னை வானொலியில் உரையாற்றுகிறார்கள்.

சமதர்மச்

சமுதாய அமைப்புக்குத் துணைபுரிவீர்!

சென்னை, ஜூலை 12—

“போக்குவரத்துத்துறை தமிழக அரசினால் மிகவும் விரிவாக நடத்திச் செல்லப்பட வேண்டிய ஒன்றாகும். பொது மக்களின் வசதிகள் அதிகரிக்க வேண்டுமென்பதோடு, அரசுக்கு வருவாய் தேடித் தரக்கூடிய ஒன்றாகவும் உள்ளது.

‘‘தனியார் நடத்துகின்ற நிறுவனங்களே நன்றாக நடக்கும்; அரசினர் ஏற்றால் செம்மையாக நடக்காது’ எனக் கூறப்படுகிறது. இப்படிக் குறை கூறப்படுவதற்கு ஏற்ப, அரசு ஏற்று நடத்தும் துறைகளில் தகுந்த முறையில் ஆதாயம் கிடைப்பதில்லை என்பதையும் நாம் மறந்துவிடுவது கூடாது.

“இதைத் திருத்தி, அரசுத் துறைத் தொழில்கள் செம்மையுற வேலைசெய்யும்’ என்பதை மெய்ப்பித்திடுங்கள்; இதன் மூலம் அரசு பஸ் துறைக்கு மட்டுமல்லாமல், சமதர்ம சமுதாய அமைப்புக்கே துணை செய்தவர்கள் ஆவீர்கள்!

“இத்துறையில் ஆதாயம் வளர வளர, உங்களது வசதிகளும் அதிகரிக்கும்.

பஸ் துறையில் வருமானம் பெருகினால், அதை அரசின் கஜானாவில் கொண்டுபோய் வைக்கும் எண்ணமில்லை!

“வசதிகள் பெருகப் பெருக, நிதி ஆதாரம் துணையாக இருக்கும்.

“தீ விபத்துக்களில் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 2,000-ஐ, நிவாரண நிதியாகச் சேர்த்திருக்கிறீர்கள்.

“ஏற்கனவே, ‘வாழ்க்கை விபத்தில்’ சிக்கி வறுமையால் வாடும் நீங்கள் கொடுத்த ரூ. 2,000-ஐ, ரூ. 2-இலட்சமாக மதிக்கிறேன்.”

--முதலமைச்சர் அண்ணா

(அரசு பஸ் போக்குவரத்து மத்திய தொழிற்சங்க தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்க ஆண்டுவிழாவில்)

சொந்த நிலமுள்ளோர்

அரிசி தருவிக்கும் உத்தரவு

எல்லா இடங்களுக்கும் பொருந்தும்

சென்னை, ஜூலை 12—

“சட்டபூர்வமான பங்கீட்டு முறை செயலில் உள்ள இடங்களான சென்னை, கோவை நகரங்களில் உள்ள சொந்த நிலம் உடையவர்கள் ஓராண்டுக்குத் தேவையான அரிசியைக் கொண்டுவருவதற்கான உத்தரவு, 17—2—66 முதல் செயலில் இருந்துவருகிறது; இந்த உத்தரவு சட்டபூர்வப் பங்கீட்டு முறை இல்லாத இடங்களுக்கும் பொருந்தும்”

என்றும் உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழக மின் கழகம்

வேலூர் மின் திட்டம்

காட்பாடி நகர் விரிவு (வ.ஆ.)

மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு

அறிவிப்பு

கீழ்க்கண்ட மின் இயக்க மேற்பார்வையாளர்களின் பார்வையிலுள்ள மின் இணைப்புகள், முறையே ஆரணி, திருவண்ணாமலை வருவாய்த் துறைகளிலிருந்து பிரிக்கப்பட்டு, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் புதிதாக ஏற்படுத்தப்பட்டு, போளூர் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

மாற்றப்பட்டுள்ள பிரிவுகள் :—

1. வந்தவாசி (நகரப் பகுதி)
2. வந்தவாசி (கிராமியப் பகுதி)
3. தெள்ளாார்
4. தேசூர்
5. கீழ்கொடுங்காலூர்
6. வடமாதிமங்கலம்
7. களம்பூர்
8. தேவிகாபுரம்
9. போளூர் (நகரப் பகுதி)
10. போளூர் (கிராமியப் பகுதி)
11. கலசபாக்கம் (கிழக்கு)
12. கலசபாக்கம் (மேற்கு)
13. சேத்துப்பட்டு (வடக்கு)
14. சேத்துப்பட்டு (தெற்கு)
15. சந்தவாசல்

மேற்கண்ட பிரிவுகளிலிருந்து மின்சாரம் பெறுபவர்கள், இந்த அறிவிப்பு கண்ட தினத்திலிருந்து கீழ்க்கண்ட முகவரியிலுள்ள உதவி தலைமை கணக்காயருடன், தங்களது மின் இணைப்புகளுக்கான கணக்குகள் குறித்துக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :—

உதவி தலைமைக் கணக்காயர்,
போளூர் வருவாய்த் துறை பிரிவு,
எண் 3, சன்னதித் தெரு,
போளூர் (வ. ஆ. மா.)

மேற்பார்வை பொறியாளர்
வேலூர் மின் திட்டம்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

15--7--67

எர்ணாவூர்

மா. வெ. நாராயணசாமி நற்பணி மன்றத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு விம்கோ நகர் அருகில்; தலைவர் : டி எஸ். கோபால் பி.எஸ்.சி., பி.காம்.; பேசுவோர் : சி. பா. ஆதித்தனார், அ. பொ. அரசு எம்.எல்.ஏ., கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ., பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

பழனி

நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு கோட்டை மேட்டில் பேசுவோர் : சாத்தூர் வெ. கண்ணன், கே. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.

புழல்

தி. மு. க. சார்பில் சட்டமன்ற உறுப்பினர் அ. பொ. அரசு, நாடாளுமன்ற உறுப்பினர் பி. சிவசங்கரன் ஆகியோருக்குப் பாராட்டு; இரவு 7-மணிக்கு காளித் தெருவில்; தலைவர் : எம். வில்சன்; பாராட்டுவோர் : அமைச்சர் சாதிக்பாட்சா, ம. பொ. சிவஞானம் எம் எல்.ஏ., அப்துஸ் சமது எம்.ஏ., எம்.பி., வி. பி. சிந்தன், மற்றும் பலர்.

(ஊராட்சிமன்றச் சார்பில் வரவேற்பும், திருவள்ளுவர்—அம்பேத்கார்—அண்ணா படத் திறப்பு விழாவும் நடைபெறும்.)

சென்னை 67-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கெங்கு ரெட்டித் தெருவில்; தலைவர் : ச. அன்பரசு; பேசுவோர்; மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., துரை அரசன் எம்.எல்.ஏ., ஆலடி அருணா எம்.எல் ஏ., ந. வீராசாமி எம்.எல்.ஏ.; கி. பாஸ்கரன் எம்.சி. கு வீராசாமி, மற்றும் பலர்.

திருவரங்கம்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் கீழவாசலில்; தலைவர் : அ. சண்முகம்; பேசுவோர் : எம். குமார், தா. துரைசாமி, எஸ். நெடுமாறன், எஸ்.எம்.வி. சாமி, மு. நடராசன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை[illegible]) [illegible]